**13 கடல்வற்றவேல்விட்டபடலம்**

உக்கிரவர்மன் சிறப்புடன் ஆட்சி செய்யும் தருணம் தொண்ணூற்றாறு அச்வமேதயாகம் செய்து முடித்தார். இதை அறிந்த இந்திரன், மன்னன் மீது பொறாமைக் கொண்டு ஊழிக்காலத்தில் கடலைப் போல பொங்கி மதுரையை அழிக்கும்படி கடல் அரசனான வருணனை ஏவினான். பின் விளவை அறியாத வருணனும், பெரு வெள்ளமாய் மதுரையை அழிக்கவந்தான். எதனையையும் அறியாத ஆழ்ந்த நித்திரையிலிருக்கும் மன்னர் கனவில், சித்தர் வடிவில் தோன்றிய அம்பலவாணர், நகரை அழிக்கும் நோக்கமுடன் கடலானது பொங்கி வருவதை கூறி, வேல் படையை எறிந்து அடக்குமாறு கூறினார்.

உடனே அமைச்சர்களுடன் அங்கு சென்று மன்னர் வியந்து நிற்கையில், ஐயன் மீண்டும் சித்தர் வடிவில் தோன்றி, காலம் தாழ்த்தாமல் விரைந்து வேல் படையை எறிந்து உலகை விரைந்து காக்கும்படி அருளினார். அதன் படி உக்ரவர்மனும் வேலை வலப்புறமாக சுழற்றி எறிந்தான். அதன் கூர்முனைப் பட்டவுடன், கடல் நீர் வற்றியது. இந்திரனின் சூழ்ச்சி தோற்றது.

சித்தர் மறைந்து உமாதேவியுடன் ரிக்ஷபவாகனத்தில் சிவனாககாட்சி அளித்து திருக்கோயில் புகுந்து அருளினார்.

உக்கிரமவர்மன் கடலுக்கும் மதுரை நகருக்கும் இடையிலுள்ள ஊர்களை தெய்வத்திற்கு உரிமையாக்கி நல்லாட்சி புரிந்துவந்தான்.

**பல்லவி**

யாகம் பல செய்த உக்ரவர்மன் மீது - பொ
றாமைக் கொண்ட இந்திரன் மாநகரை அழித்திடவே

**அனுபல்லவி**

வேகமாய் நள்ளிரவில் கடலைப் பொங்கச் செய்து
விரைவில் அழிக்கச் சொன்னான் வருணனிடம்

**சரணம்**

கனவில் சித்தராய் வந்து கடல் மீது
வேற் படையை எறியச் சொன்னாய் உக்ரவர்மனிடம்
தனயனுக்கு உன் தரிசனமும் தந்து
திருக் கோயிலினுள் சென்று கொலு வீற்றிருந்தாய்